**Judicial Form No.53**

**(See Rule 43)**

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

திருவெண்ணெய்நல்லூர்.

**CC.No. 483/ 2024**

2025-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24-ம் தேதி திங்கட்கிழமை குற்றம் முறையிடுபவரின் **அ.சா. 1-** -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.V.செல்வகோபால்,Grade-III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 1 | தொழில் | - | வீட்டுக்குடித்தனம் |
| பெயர். | - | சங்கீதா | வட்டம் | - | திருவெண்ணெய்நல்லூர் |
| க/பெ. | - | பாக்கியராஜ் | வயது | - | 38 |
| கிராமம் | - | திருவெண்ணெய்நல்லூர் | | | |

24. 02. 2025

1 வது எதிரி ஆஜர். 2 முதல் 4 ஆஜரில்லை. 2 முதல் 4 எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச. 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**1.** நான் ஏற்கனவே நீதிமன்றத்தில் சொன்ன சாட்சியத்தில் நான் என் வீட்டில் என்ன செய்ய வேண்டுமோ அனைத்து சீர்வரிசைகளும் செய்து தான் திருமணம் செய்து கொடுத்தார்கள் என்று சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். ஆனால் என்னென்ன சீர்வரிசைகள் கொடுத்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் என்ன பொருட்கள் கொடுத்தார்கள் என்று பட்டியல் லிஸ்ட் கொடுத்துள்ளோம். ஆனால் சொல்லவில்லை என்றால் சரிதான்.

2. நீதிமன்ற முதல் விசாரணையில் திருமணத்திற்கு பிறகு கொஞ்ச நாள் கழித்து சரியில்லை என்று சொல்லியுள்ளேன். ஆனால் நான் ஏற்கனவே தாக்கல் செய்த மனுவில் 6 வருடம் நாங்கள் சேர்ந்து வாழ்ந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த 6 வருடத்தில் எங்களுக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டு அவர் காணாமல் போய்விட்டதாக நான் கூறியுள்ளேனே எதனால் கருத்து வேறுபாடு ஏற்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஏற்கனவே வெறொரு பெண்ணுடன் தொடர்பு இருப்பதால் தான் கருத்து வேறுபாடு இருப்பதாக சொல்லியுள்ளேன்.

3. அவர் காணவில்லை என்று நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் எனது முதல் விசாரணையில் கருத்து வேறுபாடு காரணமாகத்தான் அவர் தலைமறைவாக இருப்பதாக நான் நினைத்திருந்தேன். ஆனால் வேறொரு பெண்ணுடன் தகாத உறவில் இருந்ததால் தான் இவ்வாறு இருந்துள்ளார் என்று தெரிந்தது என்றும் அவர்களுக்கிடையே ஒரு குழந்தை இருந்தது பின்னால் எனக்கு தெரிந்தது என்று நீதிமன்ற முதல் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சரிதான்.

4. நான் ஏற்கனவே உளுந்தூர்பேட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த இந்த புகார் மனுவில் மேற்படி விசயத்தை நான் சொல்லவில்லை என்றால் சரிதான். அதன்பிறகு தான் உளுந்தூர்பேட்டை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். மேற்படி புகாரின் நகலையோ புகார் மனுவின் ரசீதையோ நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

5. 2022 ல் கேசை வாபஸ் வாங்கச்சொல்லி 1வது எதிர்மனுதாரர் பிரச்சனை செய்ததாக சொல்லியுள்ளேனே அது சம்மந்தமாக புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. என் அப்பா 2014 ல் இறந்தார். எனக்கு திருமணமானபிறகு எங்கப்பா மன உளைச்சலில் இறந்து 14 வருடங்களாகிறது என்று சொல்லியுள்ளேனா என்றால் என் அப்பா 2014 ல் இறந்துவிட்டார். எனக்கு திருமணமாகி 14 வருடமாகிறது. மன உளைச்சல் காரணமாக எனது அப்பா இறந்து 4 வருடமாகிறது.

6. திருமணமாகி 14 வருடமாகிறது. 6 வருடங்கள் தான் அவருடன் இருந்தேன் என்று நான் எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். ஆனால் என் அப்பா திருமணமான 4 வருடத்திலேயே இறந்துவிட்டார் என்றால் சரிதான். நாங்கள் 6 வருடம் ஒன்றாக வாழும்போதுதான் என் அப்பா இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

7. என் அப்பா மன உளைச்சலில் தான் இறந்துவிட்டார் என்ற விவரத்தை நீதிமன்ற விசாரணையிலோ எனது பிரமாண பத்திரத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். ஏற்கனவே நான் தாக்கல் செய்த புகார் மனுவில் எனது தந்தை இறந்த சமயத்தில் நான் 2 சவரன் பிரேஸ்லட்டை 1வது எதிர்மனுதாரரிடம் கொடுத்து 3 அரை சவரன் மோதிரங்கள் மற்றும் துணிகள் வாங்கி எனது தந்தையின் இறுதி சடங்கின்போது அந்த 3 அரை சவரன் மோதிரத்தையும் துணிகளையும் இரண்டு அண்ணன்கள் ரமேஷ், சுரேஷ் மற்றும் எனது பெரியப்பா மகன் பிரகாஷ் ஆகியோர்களுக்கு தலா ஒரு மோதிரம் என்று 1ம் எதிர்மனுதாரர் போட்டுவிட்டார் என்றால் சரிதான். அப்போது நாங்கள் சந்தோசமாக இருந்ததன் காரணமாகத்தான் நான் அவ்வாறு செய்தேன் என்றால் தவறிவிட்டார் என்று தான் நான் கொடுத்தேன். ஏன் என்றால் அவர் செய்யமாட்டேன் என்று சொல்லிவிட்டார். என் அப்பாவிற்கு செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் நான் அவ்வாறு கொடுத்தேன்.

8. நான் சொல்வது தவறு என்றும், நாங்கள் சந்தோசமாக இருக்கும்போது தான் எனது அண்ணன்களுக்கு மேற்படி நகைகளை வரிசையாக செய்தார். இதை மறுத்து என் அப்பா மன உளைச்சலில் இறந்தார் என்று சொன்னால் சரியல்ல. ம.சா.ஆ-8 சீர்வரிசை கொடுத்ததற்கான ஆவணமாக என்றால் சரிதான். ம.சா.ஆ-8 ல் இருதரப்பினர்களின் உறவினர்கள் மணமகள் மணமகள் யாரும் இல்லை என்றால் சரிதான். சீர்வரிசைப் பொருட்களை கொடுத்த போட்டோ இது. இந்த ம.சா.ஆ-8 ல் உள்ள பொருட்களை மட்டும் தான் சீர்வரிசையாக கொடுத்துள்ளார்களா என்றால் இது தவிர வண்டிக்கான பணமும், நகைகளும் கொடுத்தார்கள்.

9. ம.சா.ஆ-8 ஐ நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்த காலத்திலேயே நான் ஏன் கொடுக்கவில்லை என்றால் எனது வழக்கறிஞர் வேறு ஏதாவது ஆவணம் தாக்கல் செய்ய வேண்டுமா என கேட்டார். அதனால் நான் இதை கொடுத்தேன். ஆக எனது வக்கீலின் ஆலோசனையின் பேரில் தான் இந்த ம.சா.ஆ-8 ஐ தாக்கல் செய்தேனா என்றால் ஆலோசனையின் பேரில் இல்லை. எனக்கு கொடுத்த சீர்வரிசைக்காக தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வது தவறு என்றாலும், ம.சா.ஆ-8 ல் உள்ளது எனது திருமணத்திற்கு கொடுக்கப்பட்ட சீர்வரிசைப் பொருட்கள் இல்லை என்றாலும், அவ்வாறு இருந்திருந்தால் மனு தாக்கல் செய்தபோது தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. இப்போது கூட வந்து பாருங்கள் ஒரு பொருட்கள் கூட எடுக்கவில்லை.

10. ம.சா.ஆ-8 ன் நெகடிவ், சி.டி. ஆகியவற்றை அதனுடன் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு திருமணமானது 2010 ல். ஆனால் ம.சா.ஆ-8 ல் உள்ள ஆவணம் புதிதாக உள்ளது என்றால் தற்போதுள்ள டெக்னாலஜிப்படி பிரிண்ட் நல்லா வந்துள்ளது.

11. நான் ஏற்கனவே தாக்கல் செய்த பிரமாண பத்திரத்தில் 14.01.2010 தேதியில் திருமணம் பதிவு செய்து அரசு கொடுத்த ரூ.50,000/-த்தை 1ம் எதிர்மனுதாரர் வசம் வைத்துக்கொண்டார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் நீதிமன்ற முதல் விசாரணையில் அதுபற்றி சொல்லவில்லை என்றால் சரிதான். ஏற்கனவே எல்லாவற்றையும் சொல்லிவிட்டேன். அந்த திருமண உதவித்தொகை தமிழக அரசால் பணமாக கொடுத்தார்களா செக்காக கொடுத்தார்களா என்றால் கவனம் இல்லை.

12. திருமண உதவித்தொகை கேட்டு கொடுத்த விண்ணப்ப படிவத்தை எனது தரப்பில் தாகக்ல் செய்யவில்லை என்றால் சரிதான். திருமண உதவி தொகை கோரி யார் மனு கொடுத்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு கவனம் இல்லை. நான் சொல்வது தவறு. எங்கம்மா செங்கம்மாவின் வங்கி கணக்கில் தான் காசோலையாக வழங்கினார்கள் என்றால் அது எனக்கு கவனம் இல்லை. அரசு ஆவணங்களின் படி வட்டார வளர்ச்சி அலுவலர் கொடுத்த தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழான பதிலில் விண்ணப்பித்த மனுதாரர் எனது அம்மா செங்கம்மா என்றும், ரூ-25,000/- 13.10.2010 ல் காசோலையாக அவரது கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளது என்று சொல்லப்பட்டுள்ளதா என்றால் சரிதான். ஆனால் எனக்கு கவனம் இல்லை.

13. நான் ஏற்கனவே தாக்கல் செய்த மனுவில் திருமண உதவித்தொகை ஐம்பதாயிரம் என்று தவறாக சொல்லியுள்ளேனா என்றாலும், அந்த தொகையை 1ம் எதிர்மனுதாரரிடம் கொடுத்துள்ளேன் என்றால் அது எனக்கு தெரியவில்லை, கவனமில்லை. எனக்கு செய்ததாக சீர்வரிசை நகைகளை வாங்கியதற்கான ரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நீதிமன்ற முதல் விசாரணையில் சீர்வரிசை பற்றி எதுவும் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். நான் சொல்வது தவறு என்றும், எனக்கு சீர்வரிசை நகைகள் போடவில்லை என்பதால் தான் அதைப்பற்றி சொல்லவில்லை என்றால் அது தவறு.

14. எனது பிரமாண வாக்குமூலத்திலோ, புகார் மனுவிலோ ரூ.75,000/- செலவில் பெரிய இருசக்கர வாகனம் ஸ்பிளண்டர் பிளஸ் 1ம் எதிர்மனுதாரருக்கு கொடுத்ததாக சொல்லியிக்கிறேன் என்றாலும், ஆனால் நீதிமன்ற விசாரணையில் அதுபற்றி எதுவும் சொல்லவில்லை என்றால் அது குறிப்பிட்டிருக்கும் பாருங்கள் என்று சாட்சி சொல்கிறார்.

மேற்படி வண்டி வாங்கியதற்கான ஆர்.சி.புக்கோ, பில்லோ நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை.

15. நான் 2010 ல் ஸ்பிளண்டர் பிளஸ் வாகனத்தின் மதிப்பு ஐம்பதாயிரம் என்பதால் எழுபத்தைந்தாயிரம் என்று தவறாக சொல்கிறேன் என்றால் அது எனக்கு கவனம் இல்லை. 1ம் எதிர்மனுதாருக்கு எந்த இருசக்கர வாகனமும் கொடுக்கவில்லை என்றும், அப்படி கொடுத்திருந்தால் அதற்கான பில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் கொடுத்த ஆதாரத்திற்கே மறுப்பு தெரிவிக்கிறீர்கள் இல்லாத ஆதாரத்தை கேட்டால் நான் என்ன சொல்வது என்று சாட்சி சொல்கிறார்.

16. எனது பிரமாண வாக்குமூலத்திலும், புகார் மனுவிலும், ஆடி மாத சீர்வரிசையாக 2 சவரன் ஆரமும், பொங்கல் சீர்வரிசை 4 1/2 சவரன் வளையல் மற்றும் ஒரு பவுன் செயின் போட்டார்கள் என்று நான் சொல்லியுள்ளேன். ஆனால் நீதிமன்ற விசாரணையில் அவ்வாறு சொல்லவில்லை என்றால் உளுந்தூர்பேட்டை விசாரணையில் நான் சொல்லியுள்ளேன். திரும்ப இங்க வந்த விசாரித்தபோது அதிலிருந்து தான் ஆரம்பிக்குது என்பதால் சொல்லவில்லை.

17. என் அப்பாவுக்கு இறக்கும்போது 56 வயது. என் அம்மாவுக்கு 53 வயது. நான் ஏற்கனவே சொன்னதுபோல் மேற்படி சொன்ன சீர்வரிசை நகைகளை அவர்கள் வயதானவர்கள் என்பதாலும், கூலி வேலை செய்பவர்கள் என்பதாலும், அவ்வாறு செய்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. எனது அப்பா வெளிநாட்டில் சவுதியில் 19 வருடம் வேலை செய்தார். எனது அப்பா வெளிநாட்டில் வேலை செய்ததை எனது மனுவிலோ நீதிமன்ற விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான்.

18. 2013 ம் வருடத்தில் 1ம் எதிர்மனுதாரர் பங்காளி சாவிற்கு அரை சவரன் மோதிரம் 1ம் எதிர்மனுதாரருக்கு போட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அது என்னுடைய பொருள். மேற்படி தேதி, மாதம், யார் இறந்தது, என்ற விவரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் அவருடைய பங்காளி குடும்பத்தில் தான் இறந்தார். அவர்களுடைய விவரம் எனக்கு தெரியாது. நானும் எனது கணவரும் ஒரே ஊரா என்றால் இல்லை. அவருடைய பூர்வீகம் சிறுவானூர். அவருடைய பங்காளி அங்கு தான் இறந்துள்ளார். அப்போது தான் என்னிடம் வாங்கிச் சென்றார். அவருடைய சொந்தபந்தம் எல்லாமே சிறுவானூரில் தான் உள்ளார்கள். இந்த விவரத்தை நீதிமன்ற விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

19. நான் தாக்கல் செய்த திருமண பத்திரிக்கையில் எனது முகவரியும் மற்றும் அவருடைய முகவரியும் ஒரே ஊர் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பங்காளி சாவிற்கு 1ம்

எதிர்மனுதாரரின் குடும்பத்திற்காகத்தான் நகை போட்டதாக சொல்லியுள்ளேன் என்றாலும் யாருக்கு போட்டேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் என் கணவர் கையில் தான் கொடுத்தேன். இந்த விவரத்தை நீதிமன்ற விசாரணையிலோ நான் தாக்கல் செய்த புகார் மனுவிலோ சொல்லவில்லை என்றால் சரிதான்.

20. எனது பிரமாண வாக்குமூலத்தில் 2013 ல் எனது தந்தை அவர் தனிப்பட்ட முறையில் 2 சவரன் பிரேஸ்லட் எதற்காக போட்டார், எந்த தேதியில் போட்டார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் எங்கப்பா திருமணத்தின்போது 7 சவரன் போட்டார். நான் குடும்பத்திற்கு ஒரே பெண் என்பதால் அவருக்கு பணம் வரும்போதெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக கொடுத்தார். என் அப்பா இறந்தபோது அந்த பிரேஸ்லட்டை என் கணவரிடம் கொடுத்தேன். இந்த விவரத்தை நீதிமன்ற விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். கேட்கவில்லை சொல்லவில்லை.

21. எனது பிரமாண வாக்குமூலத்தில் என் கணவர் குடித்துவிட்டு பிரச்சனை செய்வார் என்று நான் சொல்லியுள்ளேன் ஆனால் நீதிமன்ற விசாரணையில் அதுபற்றி சொல்லவில்லை என்றால் முதல் விசாரணையில் எல்லாவற்றையும் சொல்லியுள்ளதால் 2 வது விசாரணையில் எல்லாவற்றையும் சொல்லவேண்டிய அவசியம் இல்லை என்பதால் சொல்லவில்லை.

22. அடிக்கடி என் அம்மா வீட்டிற்கு போய் பணம் வாங்கி வரச்சொல்லி பிரச்சனை செய்ததாக சொல்லியுள்ளேனே இது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளேனா என்றால் 2015 ல் பிரச்சனை செய்ததால் உளுந்தூர்பேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அதற்கான சி.எஸ்.ஆர். காபி கொடுக்கவில்லை. குடும்ப பிரச்சனை என்பதால் சமாதானம் பண்ணி அனுப்பிவிட்டார்கள். நான் சொல்வது தவறு என்றும், புகார் கொடுத்திருந்தால் காவல் நிலையத்தில் சி.எஸ்.ஆர். கொடுத்திருப்பார்கள் என்றால் அது தவறு.

23. 2018 ல் 2, 3 எதிர்மனுதாரர்களை என் அப்பா அம்மா வீட்டிற்கு போய் கண்டித்ததாக புகார் வாக்குமூலத்திலும், நீதிமன்ற விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் அப்பா 2014 ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். 2018 ல் எனது பெற்றோர் அழைத்து கொண்டு 2, 3 எதிர்மனுதாரர்களிடம் போய் கேட்டதாக சொல்லியுள்ளேனா என்றால் எனது பெரியப்பா, சித்தப்பா குடும்பத்தில் உள்ள பெரியயோர்களை கூப்பிட்டுப்போய் கேட்டோம். பெற்றோர்கள் என்றால் குடும்பத்தில் உள்ள அப்பா அம்மா தான் பெற்றோர்கள் என்றால்

அப்பா மட்டும் அல்ல. அம்மாவும் பெற்றோர்தான். அவரும் தான் கூட வந்தார். நான் சொன்னது பொய் என்றும், 2014 ல் இறந்த அப்பாவை எவ்வாறு அழைத்து செல்லமுடியும் என்றால் அப்பா இறந்துவிட்டார். அம்மா உயிருடன் தான் இருந்தார். நான் அம்மாவுடன் தான் போய் கேட்டேன். இது சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். வேறொரு பெண்ணுடன் தொடர்ப்பில் இருக்கிறார் என்ற சந்தேகத்தின் பேரில் தான் நாங்கள் போய் கேட்டோம். அது உறுதியானவுடன் தான் 2019 ல் அவர் ஊரைவிட்டு போய்விட்டார். சில காலம் வரவேயில்லை. இது சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அது ஏற்கனவே தெரிந்ததால் தான் கொடுக்கவில்லை. ஊரில் இருந்தால் தானே கொடுப்பதற்கு என்று சாட்சி கேட்கிறார்.

24. 2018 ல் 1ம் எதிர்மனுதாரருக்கும், 2 ம் எதிர்மனுதாரருக்கும் 2 ம் எதிர்மனுதாரர் வீட்டில் வைத்து இந்து சாஸ்திர முறைப்படி அவருக்கு நடுவீட்டில் தாலி காட்டினார் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன். ஆனால் தேதி மாதம் எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

25. இந்து சாஸ்திர முறைப்படி திருமணம் என்றால் மணமகன் மணமகள் குடும்பத்தினார் அக்னி குண்டத்தில் 7 முறைகள் வலம் வந்து சப்தபதி, தத்தகோமம் முறைப்படி நடந்தால் அது செல்லத்தக்க திருமணம் என்றால் அவ்வாறு நடக்கவில்லை என்பதால் தான் முதல் மனைவியாகிய நான் நீதிமன்றத்தில் வந்து நீதி கேட்கிறேன். அப்போது எனது பிரமாண வாக்குமூலத்திலும், நீதிமன்ற விசாரணையிலும் இந்து சாஸ்திர முறைப்படி திருமணம் நடந்தது சொல்வது தவறா என்றால் அவர்களுடைய திருமணம் தவறு.

26. 1ம் எதிர்மனுதாரருக்கும், 2ம் எதிர்மனுதாரருக்கும் இடையே நடந்த திருமணம் சட்டப்படியான திருமணம் இல்லை என்பதால் 3, 4 எதிர்மனுதாரர்களை இந்த வழக்கில் சேர்த்தது தவறு என்றால் திருமணம் சட்டப்படியானது இல்லை. ஆனாலும், 3, 4 எதிர்மனுதாரர்கள் அதற்கு உடைந்தையாக இருந்துள்ளார்கள். அவர் தலைமறைவான பிறகு நான் உடனே என் அம்மாவீட்டிற்கு சென்றுவிட்டேனா என்றால் ஒரு 10 நாட் இருந்துவிட்டு பின்னர் எங்கம்மாவீட்டிற்கு சென்று புகார் கொடுத்தேன். அந்த 10 நாள் இருந்து என் கணவர் இனிமேல் வரமாட்டார் என தெரிந்து கொண்டு எனது சீர்வரிசை பொருட்கள் எடுத்து சென்றுவிட்டேன் என்றால் இல்லை. ஒரு கிராம் கூட எடுத்துச்செல்லவில்லை. மன உளைச்சலுக்கு ஆளாகிதான் சென்றுவிட்டேன்.

27. நான் விசாரித்துள்ள சாட்சிகளில் 2 வது சாட்சி சித்தி உறவுமுறை என்றால் சரிதான். அவர் இந்த ஊர் அல்ல வெளியூர் என்றால் இந்த ஊர் வெளியூரில் திருமணம் செய்து

கொடுத்துவிட்டார்கள். 3 வது சாட்சி வருண் எனது அத்தை மகன் என்றால் சரிதான். குழந்தையின்மையால் டிரிட்மெண்ட் எடுப்பது சம்மந்தமாக எங்களுக்குள் கருத்து ஒற்றுமை இல்லாமல் போனது என்று எற்கனவே நீதிமன்றத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். குழந்தையில்லாததால் விழுப்புரத்தில் இருவரும் 3 வருடத்திற்கு முன் சமரசம் பேசினோமா என்றால் இல்லை. நான் சொல்வது தவறு அதுபோல் சமரசம் பேசினோம். அந்த சமரசத்தில் 1ம் எதிர்மனுதாரரால் கொடுக்க முடியாத அளவிற்கு தொகை நாங்கள் கேட்டோம் என்றாலும், அதன்பிறகு தான் நீதிமன்றத்தில் தனப்புகார் தாக்கல் செய்தேன் என்றால் அவர் தான் என்னை விவாகரத்து கேட்டு என்னை டார்ச்சர் பண்ணினார்.

28. அவர் தான் நீதிமன்றத்தில் டார்ச்சர் கேட்டார் என்பது தவறு. எனது புகார் மனுவில் மனுதாரர் 1ம் எதிர்மனுதாரரை சட்டப்படி விவாகரத்தது செய்ய உள்ளார் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் நான் சொல்லவில்லை. அவர் தான் விவாகரத்து கேட்டு தொல்லை பண்ணினார். இந்த புகார் மனுவில் வழக்கறிஞர் தயார் செய்தது தான் என்றால் அதனால் தான் சொல்லவில்லை என்றால் அப்படி நான் சொல்லவில்லை. விவாகரத்து என்று நான் கேட்கவில்லை. நான் சொல்வது தவறு. எதிர்மனுதாரரகள் பேரில் வழக்கு தாக்கல் செய்தால் சமரசத்தில் கேட்ட தொகையை கொடுப்பார்கள் என்பதால் தான் தாக்கல் செய்தோம் என்றால் அவ்வாறு இல்லை. நான் விவாகரத்துக்காக போடவில்லை. தீர்விற்காக போட்டுள்ளேன். நான் சொன்னதுபோல் சம்பவம் நடந்திருந்தால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்பேன் என்றால் அது தவறு. அவர் நான் வேலைக்கு போகும்போதெல்லாம் டார்ச்சர் செய்து விவாகரத்து கொடு என்று சொன்னார்.

29. நான் சொன்னதுபோல் சம்பவம் நடந்திருந்தால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்பேன் என்றாலும், அதன் பேரில் காவல் துறை வழக்கு பதிவு செய்திருப்பார்கள் என்றால் 2018 ல் இவர் வேலைக்கு செல்லும்போது டார்ச்சல் செய்ததாக திருவெண்ணெய்நல்லூர் காவல் நிலையத்தில் கொடுத்துள்ளேன். சி.எஸ்.ஆர். கொடுத்துள்ளார்கள். எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கம் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

D.M-cum-JM.
T.V.Nallur.